1987 நவம்பர் 16]

கிரமங்கலத்தில் திருமண மண்டபம்.

138—(*வினா எண். 8157) திரு. அ. வெங்கடாசலம்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தொகுதி கிரமங்கலத்தில் மெய் நின்றநாத சுவாமி திருக்கோவிலில் திருமண மண்டபம் கட்டும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இத் திருக்கோயிலுக்கு திருமண மண்டபம் கட்டுவதற்கு இந்து சமய அறநிலையத் துறை ஆணையரால் 2–12–1981-ல் ரூ. 1,32,000-க்கு நிர்வாக அனுமதியும், 4–12–1981-ல் மதிப்பீடும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. திருமண மண்டபம் கட்ட இத் திருக்கோயிலுக்கு முன்பு இதற்குச் சொந்தமான இடம் ஏதும் இல்லாத காரணத்தால், புறம்போக்கு இடத்தை திருக்கோயில் பெயருக்கு பட்டா பெற அக்கோயில் செயல் அலுவலரால் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு 7–6–1981-ல் எழுதப்பட்டுள்ளது. ஆனால் பட்டா இதுவரை கிடைக்கப் பெறவில்லை. திருமண மண்டபம் கட்ட தேவையான புறம்போக்கு நிலம் இத் திருக்கோயிலின் பெயரில் மாற்றப்பட்டு பட்டா அளிக்கப்பட்ட பின்னர்தான் திருமண மண்டபம் கட்ட வாய்ப்புள்ளது.

செங்கோட்டையில் பால் பதனிடும் தொழிற்சாலை.

139—(*வினா எண். 9190) திரு. செ. பெருமாள்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டம் செங்கோட்டையில் பால் பதனிடும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு தலைவரவர்களே, தற்போது நெல்லையில் உள்ள ஐம்பதினாயிரம் லிட்டர் திறன் கொண்ட பால் பதனிடும் நிலையம் ஒரு இலட்சம் திறன் கொண்டதாக விரிவுபடுத்தும் திட்டம் உள்ளதால் மேலும் செங்கோட்டையில் ஒரு பால் பதனிடும் நிலையம் அமைக்க தற்பொழுது அவசியமில்லை.